# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : CC.No.392/2017
## வழக்கு சாட்சி PW-9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹபிபுல்லா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முகமது யூசுப் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | செங்கோட்டை | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 14.07.2026.

**(எதிரி ஆஜரில்லை. 205 Crpc மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது செங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 09.05.2017 ம் தேதி 07.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயசங்கர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மாரியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.168/2017, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 323, 506(2) இதச ன் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். அந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அதே தினம் 17.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் திருமலைக்குமார் மற்றும் இசக்கித்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6**

ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர், சாட்சிகள் மாரியப்பன், ஆத்தியப்பன், முருகேசன், பரமசிவம், வைகுண்டராஜா, சுடலை, மகேந்திரன், திருமலைக்குமார், இசக்கித்துரை, சிறப்பு உதிவ ஆய்வாளர் ஜெய்சங்கர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எதிரி முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை.

பின்னர், காயம்பட்ட மாரியப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவர்.பிரின்ஸ் ரஜினிகாந்த் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 12.05.2017 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை யார் மூலம் அனுப்பப்பட்டது என்றால் கோர்ட் ஏட்டு மூலம் அனுப்பப்பட்டது. காலதாமதத்திற்கான தனிப்பட்ட காரணம் இல்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 13:10:35 +0530